பக்கங்கள்: நான்கு

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 04 செவ்வாய்க்கிழமை (20-08-1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 259

# சோவியத்தில் திடீர்ப் புரட்சி!

# கோர்பச்சேவ் பதவி நீக்கம்!!

## எண்மர் குழுவிடம் ஆட்சி

### மாஸ்கோவில் எதிர்ப்புப் பேரணி

மாஸ்கோ, ஆகஸ்ட் 20

சோவியத் ஜனாதிபதி திரு. மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் திடீர்ப் புரட்சி மூலம் நேற்றுப் பதவிநீக்கம் செய்யப்பட்டார். புதிய ஜனாதிபதியாக கினாடி யனாயேவ் நேற்றுப் பதவியேற்றார். எண்மர் கொண்ட குழுவிடம் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கோர்ப்பச்சேவ் பதவி நீக்கத்திற்கு எதிராக நேற்று மாஸ்கோவில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடத்தப்பட்டன.

மிக்கெய்ல் கோர்பச்சேவ்வின் பதவி நீக்கம் இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

பதவி நீக்கச் செய்தி எட்டியவுடன் மாஸ்கோவில் மக்கள் பெரும் அளவு கூடினர். புதிய ஆட்சியாளர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டப் பேரணிகளை நடத்தினர்.

புதிய ஜனாதிபதியாக தற்போது பதவி ஏற்றிருக்கும் கினாடி யனாயேவ், கோர்பச்சேவ் ஆட்சியில் உப ஜனாதிபதியாக இருந்தவர்.

54 வயதான கினாடி யனாயேவ் கடந்த டிசம்பர் மாதமே கோர்ப்பச்சேவ்வின் ஆதரவுடன் உப ஜனாதிபதி

[3 ஆம் பக்கம் பார்க்க]



கோர்பச்சேவ்

### கோர்பச்சேவ் எங்கே?

பதவி நீக்கம் செய்யப்பட்ட திரு. மிக்கெய்ல் கோர்ப்பச்சேவ் தற்போது எங்கு சிறை வைக்கப்பட்டிருக்கிறார் என்பது குறித்து முரண்பட்ட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

ஏ.எவ்.பியின் செய்திப்படி, திரு. கோர்ப்பச்சேவ் அவரது உத்தியோக பூர்வ வாசஸ்தலத்திலேயே சிறை வைக்கப்பட்டிருப்பதாக தெரி

[2ஆம் பக்கம் பார்க்க]

### இராணுவச் சிப்பாய்களின்

## பழுதடைந்த சடலங்களை அரசு இனி பொறுப்பேற்காது

கொழும்பு, ஆக. 20

எதிர்காலத்தில் விடுதலைப் புலிகளினால் ஒப்படைக்கப்படும் சிப்பாய்களின் சடலங்களை ஸ்ரீலங்கா அரசு பொறுப்பேற்பதாயின்—

அச்சடலங்களின் நிலை குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கை கிடைத்து, அதனைப் பரிசீலித்த பின்னரே அரசு சடலங்களைப் பொறுப்பேற்கும்.

— இவ்வாறு இராணுவ வட்டாரங்கள் தெரிவித்ததாக ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

ஆனையிறவுப் போரின் போது விடுதலைப் புலிகள் 29 படையினரின் சடலங்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழு ஊடாக அரசிடம் ஒப்படைத்தனர் என்பது தெரிந்ததே.

அச்சடலங்கள் அடையாளந் தெரியாதளவு உருக்குலைந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## புலிகளின் காவலில் 200 படையினராம்!

### யாழ். தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஆக. 20

வட பகுதியில் விடுதலைப் புலிகளின் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ள இருநூறுக்கும் அதிகமான பொலீஸாரையும் படையினரையும் விடுவிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவி நாடப்பட்டிருக்கிறது.

—இப்படி யாழ். குடா படைகளின் தளபதி பிரிகேடியர் விஜய விமலரத்தின தெரிவித்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது. [உ-எ]

### கைதி பரிமாற்ற விவகாரம்:

## புலிகளின் கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளதாம்!

கொழும்பு, ஆக. 20

தம்மிடம் சிக்கி உள்ள சிப்பாய் கே. எல். உபாலியை விடுவிப்பதற்குப் பதிலாக —

அமிர்தலிங்கம் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள தமது முக்கிய உறுப்பினரான மாஸ்டர் என்று அழைக்கப்படும் மரியதாஸனை விடுவிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகள் இயக்கம் விதித்த நிபந்தனையை அரசாங்கம் நிராகரித்து விட்டது.

இத்தகவலை சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

தன்னை விடுதலைப் [illegible] இயக்கத்திடம் ஒப்[illegible] வேண்டாம் என்று மரிய

[3 ஆம் பக்கம் பார்க்க]

## ஆட்சிக் கவிழ்ப்பு நடந்தது ஏன்?

மாஸ்கோ, ஆக. 20

சோவியத் யூனியனை அழிவில் இருந்து காக்கவும் புதிய குருட்டுத் தனமான கொள்கையில் இருந்து நாட்டை மீட்கவுமே தாம் ஆட்சியைக் கைப்பற்றி இருப்பதாக சோவியத்யூனியனின் புதிய ஆட்சியாளர்கள் அறிவித்துள்ளனர். [இ-எ]

## அமெரிக்க உதவி நிறுத்தம்

வாஷிங்டன், ஆக. 20

சோவியத் யூனியனுக்கான சகல பொருளாதார உதவிகளும் இடை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் நேற்று அறிவித்தார். (இ)

## பரந்தனில் தாக்குதல்

லண்டன், ஆக. 20

''ஆனையிறவுக்கு தெற்கே, பரந்தனில் விரைவில் இராணுவம் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கும்''

மேற்கண்டவாறு வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ தெரிவித்ததாக பி. பி. ஸி. நேற்றிரவு அறிவித்தது.

இந்தப் பகுதியில் எதிர்த் தாக்குதல்களை மேற்கொள்ள புலிகளும் தமது படைகளைத் திரட்டி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பரந்தன் பகுதியில் அரச விமானப்படை நேற்று [illegible] ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. [அ-எ-3]

## புரட்சியை எதிர்க்குமாறு யெல்சின் அறைகூவல்

மாஸ்கோ, ஆக. 20

சோவியத் யூனியனில் ஆட்சியைக் கைப்பற்றிய புதிய ஆட்சியாளர்களை எதிர்க்குமாறு சோவியத் யூனியனின் பெரிய மாநிலமான ரஷ்யக் குடியரசின் ஜனாதிபதி யெல்சின் நேற்று அறைகூவல் விடுத்தார்.

கோர்பச்சேவ்வின் அரசியல் எதிரியாகவும் சோவியத் யூனியனின் பலம் வாய்ந்த தலைவர்களில் ஒருவராகவும் கருதப்பட்டு வந்த ரஷ்யக் குடியரசு ஜனாதிபதி யெல்சின், நேற்று மாஸ்கோ வீதிகளில் வந்து சோவியத் டாங்கி ஒன்றின் மீது ஏறி எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பினார்.

[4 ஆம் பக்கம் பாாக்க]

## புஷ் - மேஜர் கண்டனம்

வாஷிங்டன், ஆக. 20

கோர்ப்பச்சேவ் பதவி நீக்கம் உலக நாடுகளில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கிறது.

கோர்ப்பச்சேவ் பதவி நீக்கப்பட்டது பெரும் வருத்தம் தரும் நிலையை உருவாக்கி இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் தெரிவித்தார். இது கடுமையான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரித்தார்.

சோவியத் அரசியல் சாசன ஒழுங்குகளுக்கு முற்றும் முரணாக இந்த பதவி நீக்கம் இடம்பெற்றிருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் தெரிவித்தார். சோவியத் யூனியனில் இடம்பெறும் நிகழ்வுகள் குறித்து சீனா நேற்று மௌனம் சாதித்தது. (இ)

## உடன்படிக்கையில் இன்று கையெழுத்திடவிருந்தார்

சோவியத் மாநிலங்களுக்கும் மத்திய அரசுக்கும் இடையில் புதிய உறவுகளை ஏற்படுத்துவதற்கு வழி செய்யும் புதிய உடன்படிக்கை ஒன்றில் கோர்பச்சேவ் இன்று கையெழுத்திட இருந்தார்.

அதற்கிடையில் அவரது பதவிக்கவிழ்ப்பு இடம்பெற்று விட்டது.

கடந்த ஜூலை 30, 31 ஆம் திகதிகளில் மாஸ்கோவில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை சந்தித்து உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தார் திரு. மிக்கெய்ல் கோர்பச்சேவ் சந்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழக அரசைக் கலைக்குமாறு காங்கிரஸ் எம். பிக்கள் வற்புறுத்து

புதுடில்லி, ஆக. 20

தமிழ் நாட்டில் பதவியில் உள்ள அ. தி. மு. க. அரசைக் கலைக்கவேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் எம்.பிக்கள் நேற்று லோக சபையில் வற்புறுத்தினர்.

மத்திய அமைச்சர் ஒருவருக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதற்கு தமிழக அரசு தவறிவிட்டது. அந்தக் கடமையைச் சரிவரச் செய்ய முடியாத அரசு மக்களை எப்படிப் பாதுகாக்கப் போகிறது?— என்று கேட்டு காங்கிரஸ் எம்.பிக்கள் பலரும் தமிழக் அரசு மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என வற்புறுத்தினர்.

சபையில் பிரசன்னமாக இருந்த அ. தி. மு. க. எம்.பிக்கள், அமைச்சர் சிதம்பரத்தை தமது கட்சித் தொண்டர்கள் தாக்கவில்லை என்று தெரிவித்தனர்.

அதனை ஏற்றுக் கொள்ள மறுத்த காங்கிரஸ் எம்.பிக்கள் தமிழக அரசு திறமையில்லாத, வல்லமை குறைந்த அரசு என்று தொடர்ந்தும் கண்டித்த வண்ணம் இருந்தனர். [அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு ஆங்கில ஒலி வெட்டி, புதிய தட்டச்சு இயந்திரம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: R. மருதலிங்கம், 8/1, அம்மன் வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். (17847)

### புத்தக விற்பனை

1990 ஆம் ஆண்டில் நடைபெற்ற சாகித்திய விழாவில் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்ட கீழைத் தேசியக் கல்விச் சிந்தனைகள் என். கே. தர்மலிங்கம் M.A. எழுதியது. உயர் நிலைப் பட்டப் படிப்பு, பல்கலைக் கழகம் இவற்றிற்கு அமைவானது. சொற்ப பிரதிகள் உண்டு. கிடைக்கும் இடம்; பூபாலசிங்கம், ஸ்ரீ லங்கா, சோபனா புத்தகசாலைகள். (17846)

### தேவை

Sony ICF - SW 1 பொக்கற் றேடியோ உடன் தேவை. விலை விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். விமலாஸ், நவீன சந்தை, சாவகச்சேரி. (17848)

ஆண்களுக்குரிய ஆடைகள் வெட்டி (Cutters) தைக்கக் கூடிய அனுபவம் வாய்ந்தவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும். நியூவே றெக் கோடிங் சென்ரர், நல்லூர்: யாழ்ப்பாணம். [17486]

A/L மாணவிக்கு பௌதீக வியல், இரசாயனவியல் வீட்டிற்கு வந்து கற்பிக்க ஆசிரியர் தேவை. தொடர்பு: வி. நடராஜா, சட்டத்தரணி, நெடுங்குளம் வீதி, யாழ்ப்பாணம் (4249)

### ரைப்ரைட்டர்

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில ரைப்பிங் வேலைகளுக்கும், பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (சி-0290)

## தங்கப் பாளம் கைப்பற்றப்பட்டது

கொழும்பு, ஆக. 20

துபாயில் இருந்து ஒரு பெண்ணினால அனுப்பப்பட்ட டிரங்க் பெட்டி ஒன்றினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 லட்சம் ரூபா பெறுமதியான பன்னிரண்டு தங்கப் பாளங்களை கொழும்பு துறைமுகப் பொலீஸார் கைப்பற்றினர். (இ-எ)

### மணமகள் தேவை

யாழ். இந்து, 32 வயது சுவிட்ஸர்லாந்தில் தொழில் பார்க்கும், மிருகசீரிடம் 3ஆம் பர்தம், 8இல் செவ்வாய்க் குற்றமுள்ள மணமகனுக்கு மணப்பெண் தேவை. தொடர்பு கொள்ளவும்: V. நந்தகோபால், தபாற் கந்தோர் வீதி, பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. (17845)

### தவறிவிட்டது

15 - 07 - 91 அன்று வவுனியாவிலிருந்து கோதீவிற்கு வந்த பஸ்ஸில் எனது சாம்பல் நிற ரவலிங் பாக், (Red Stone) பாஸ்போர்ட் மற்றும் சில பொருள்களுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும் படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன். (இ-0371)

## கிறிஸ்தசேவ ஆச்சிரம 52 ஆம் ஆண்டு நிறைவு விழா

இடம்: கிறிஸ்தசேவ ஆச்சிரமம், மருதனார்மடம், சுன்னாகம்.

காலம்: 21 - 08 - 1991 புதன்கிழமை.

நிகழ்ச்சி நிரல்

6-30 மு. ப. ★ பரிசுத்த நற்கருணை ஆராதனை
3-00 பி. ப. ★ பகிரங்கப் பொதுக்கூட்டம்
★ புத்தக வெளியீடு

ஆச்சிரம ஸ்தாபகர்
வண. சேவக். S. செல்வரெட்ணம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வண. சேவக். சாம் அல்பிரெட், (சாம் அண்ணன்)

கிறிஸ்தசேவ ஆச்சிரமம்,
மருதனார்மடம், சுன்னாகம். (4247)

## ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 07 - 08 - 1931

ஆண்டவன் அடியில்; 31 - 08 - 1990

### திருமதி அன்னமலர் சிவரட்ணம்

''ஆண்டு ஒன்று சென்றிடினும்
உங்கள் நினைவுகள் மறைந்திடுமோ''?
தாங்கள் ஏற்றி வைத்த தீபங்கள்
ஒளி தந்து கொண்டே இருக்கின்றன.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளை.

நாக்கியம்புலம்,
ஏழாலை மேற்கு, சுன்னாகம். [17831]

# நிவாரண நிறுத்தத்தை அரசு பின்போடலாம்

முகாமுக்கு வெளியே வாழும் அகதிகளுக்கான நிவாரணத்தை நிறுத்தும் திட்டத்தை அரசு பின்போடலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்தினா தலைமையில் கொழும்பு கிராமோதய மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நிவாரண நிறுத்தத்தைப் பின்போடுமாறு அரசாங்கத்தைக் கோருவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு, சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பான இந்த அமைச்சர் மட்டக் கூட்டத்தில் யாழ்ப்பாணம், மன்னார், கிழக்கு மாகாணம் ஆகியவற்றின் அகதிகள் நிலை குறித்து ஆராயப்பட்டது.

இதேவேளை நிவாரண நிறுத்தம் தொடர்பாகப் பேச தங்களுக்கு சந்தர்ப்பம் தருமாறு ஜனாதிபதியை ஏழு கட்சிகள் கோரியுள்ளன.

## கோர்பச்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

ஆனால் ஏ. பி. செய்தி ஸ்தாபனம், கருங்கடலை அண்டியுள்ள கிரிமியா தீவில் உள்ள விடுமுறை வாசஸ்தலத்தில் திரு. கோர்ப்பச்சேவ் சிறை வைக்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது.

## கவனிக்கவும்

மில்க்வைற் சலவைத்தூள் நீல வண்ணத்தில் அச்சடிக்கப்பட்ட புதிய பைக்கற்றில் விற்பனையாகிறது. (வழமையான பொலித்தீன் பைக்கற் கிடையாததால்) 50 கிறாம் அடைக்கப்பட்டது.

100 வெற்றுப் பைக்கற் சேர்ப்பித்து அழகியதோர் உள்ளூர் உற்பத்தி லேஞ்சி அன்பளிப்பாகப் பெறுங்கள்.

**மில்க்வைற், யாழ்ப்பாணம்.**

(சி-0372)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா விசுவலிங்கம்

(சட்டத்தரணி)

வட்டுக்கோட்டை மேற்கு வசியும், சிங்கப்பூரில் வசித்து வந்தவருமாகிய கந்தையா விசுவலிங்கம் 12-08-1991 இல் காலமாகிவிட்டார். அன்னார் மாகறீனின் அன்புக் கணவரும், நீலாம்பிகையின் தகப்பனாருமாவர். இவர் காலஞ்சென்ற டாக்டர் குமாரசுவாமி, காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற பொன்னம்பலம், காலஞ்சென்ற இளைப்பாறிய அதிபர் தியாகராசபிள்ளை ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் சிங்கப்பூரில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. ஸ்கந்தராசா

கனகரத்தினம் வீதி,
வட்டுக்கோட்டை. (17849)

## திருமதி பஞ்சாட்சர ஐயர் யோகாம்பா

அளவெட்டி கும்பளாவளையைச் சேர்ந்த காலம் சென்ற பிரபல சோதிடர் பிரம்மஸ்ரீ ச. பஞ்சாட்சர ஐயர் அவர்களின் மனைவி யோகாம்பா அவர்கள் 19-8-91 மாலை 4 மணியளவில் சிவபதம் அடைந்து விட்டார். இவர் கணேசரத்தின சர்மா, சோமாஸ்கந்த சர்மா, பாலசுப்ரமணியக் குருக்கள், விக்னராஜ சர்மா ஆகியோரின் அன்புத் தாயாரும், தேஜோவதி, சுசீலா தேவி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஹம்ஸத்வனி (யாழ். பல்கலைக்கழகம்). சாருமதி (யாழ். தொழில்நுட்பக் கல்லூரி), லோகசாரங்கன், ஹரிஹரன், பத்மநாதன், சிவதர்ஷினி, பத்மசொரூபிணி, நீதிமதி, கோவர்த்தனன் ஆகியோரின் அன்புப் பாட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [20-8-91] காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

தகவல் :
ப. கணேசரத்தின சர்மா

[17657]

## திருமதி கண்மணி தியாகராஜா

திருமதி கண்மணி தியாகராஜா காலமானார், இவர் காலஞ்சென்ற டாக்டர் K. M. தியாகராஜாவின் அன்பு மனைவியும், பற்குணமாணிக்கம், அருள் மாணிக்கம், உருத்திர மாணிக்கம், வசந்த மல்லிகாவின் அருமைத் தாயாரும், சிவாஜினி, கமலபத்மனி (றதி). தவறஞ்சினி (டொலி), இளம்பூரணன் ஆகியோரின் ஆசை மாமியாரும், தக்ஷாயணி, ஆதித்தன், அர்ச்சுனன், அனுக்ஷன், அருணசொரூபன், இந்துஜா, ஆனந்தநேசன் ஆகியோரின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 20 - 8 - 91 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணியளவில் தகனக் கிரியைக்காக 228, செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு இல்லத்தில் இருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தி. பற்குண மாணிக்கம்

228, செம்மணி வீதி,
நாயன்மார்க்கட்டு. (17853)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**பொ. சோமாஸ்கந்தசிவம்**
(அதிபர், யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்)
மலர்வு: 21 — 08 — 1932



திருமதி
**சோ. மங்களநாயகி அம்மை**
(ஆசிரியை, யா/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்)
மலர்வு: 12 — 01 — 1932

உதிர்வு: 31 — 08 — 1990

திதி: 20 — 08 — 1991

நினைப்பு, சொல், செயல் எல்லாம் நல்லனவாகவே இருத்தல் வேண்டும் என்ற கோட்பாட்டோடு வாழ்ந்த எம் அன்புப் பெற்றோரின் ஆன்மா சாந்தியடைய இறைவனை வாழ்த்துகின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மகள் - சோ. ஆதி,
மற்றும் குடும்ப உறவினர்களும்.

கிழ்கரவை,
சரவெட்டி. [17799]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா இராணுவத்தில் 77 ஆயிரம் துருப்புகள்!

## அரச விரோத சக்திகளும் புகுந்து விட்டனவாம்!

கொழும்பு, ஆக. 20
ஸ்ரீலங்கா இராணுவத்தில் உள்ள துருப்புகளின் எண்ணிக்கை தற்போது 77 ஆயிரம்!

பெரிய அளவில் இராணுவத்திற்கு ஆள் திரட்டும் போது அரசவிரோத சக்திகளும் இராணுவத்துக்குள் புகுந்து விட்டன.

—ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க இத்தகவலைத் தெரிவித்தார்.

கொழும்பு ''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா அந்தப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:

ஆனையிறவு யுத்தத்தில் நாம் எதிர்பார்த்ததிலும் பார்க்க கூடுதலாகச் சாதித்துள்ளோம். பல பாதகங்களுக்கு மத்தியில் போரிட்டோம். முடிவில் பிரமாதமான வெற்றியைப் பெற்றோம்.

### பிரபா மீது பிடிவிறாந்து

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் மீது பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனையிறவு தோல்வி மூலம் தமது பிரசார இயக்கத்தில் திரு. பிரபாகரன் தோல்வியடைந்து விட்டார். இப்போது சிலரின் ஆதரவே அவருக்கு இருக்கும்.

பிரபாகரன் சயனைட் எடுக்காத வரை அவரை விரைவில் உயிருடன் பிடிப்போம் என்று பிரதிக்ஞை செய்கின்றேன். தப்புவது அவருக்கு கஷ்டமான காரியமாக இருக்கும். அவர் எங்கு இருக்கிறார் என்பது எமக்குத் தெரியும். அவர் தப்பிவிட நாம் அனுமதிக்கமாட்டோம்.

விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்த இடங்களில் துருப்புக்கள் தமது நிலையைப் பலப்படுத்தும். அவ்விடங்களில் அரசு இயந்திரத்தின் சட்டம். ஒழுங்கு பராமரிக்கப்படுவது விரைவில் ஆரம்பமாகும்.

### கிழக்கில்

சுமார் 600 விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணத்தில் செயற்பட்டு வருகின்றார்கள்.

கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிடியில் உள்ள இடங்களைக் கைப்பற்றியவுடன் அங்குள்ள துருப்புகள் வட பகுதி செல்லும்.

### 3 மாத காலத்திற்குள்......

வட மாகாணத்தில் ஆனையிறவு வரையான பகுதிகளில் உள்ள விடுதலைப் புலிகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் வெளியேற்றப்படுவர். அப் பகுதிகளில் பொதுமக்கள் சுதந்திரமாக அதன் பின்னர் நடமாடுவர்.

இராணுவத்திற்கு ஆள் திரட்டுவது நிறுத்தப்பட்டுள்ளது. இராணுவத் தொண்டர்களையும் சேர்த்து தற்போதைய இராணுவத்தின் பலம் 77 ஆயிரம் ஆகும்.

சகஜ நிலை திரும்பியதும் இராணுவத்தின் பலம் பற்றி மீளாய்வு செய்வோம்.

### இராணுவத்தில் தீய சக்திகள்

இராணுவத்தின் நற்பெயருக்கே கறை ஏற்படுத்துவதில் விரும்பத்தகாத சக்திகள் சில ஈடுபட்டுள்ளன.

விடுதலைப் புலிகளுடன் போராடும் துருப்புகளின் மனோநிலையை பாதிக்கும் வகையில் அச்சக்திகள் ஈடுபடுகின்றன.

பெரிய அளவில் இராணுவத்திற்கு ஆள் திரட்டல் இடம் பெற்ற போது, விரும்பத்தகாத சக்திகளும் இராணுவத்தினுள் புகுந்து கொண்டு விட்டன. அவர்களில் சிலர் வெளியேற்றப்பட்டு விட்டனர். இன்னும் சிலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எனது தலைமையின் கீழ் இராணுவம் மிகப்பெரிய நெருக்கடியைத் தாண்டி விட்டது. கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளோம்.

அது மீண்டும் தலை தூக்காமற் பார்த்துக் கொள்ள வேண்டும் — என்று அவர் சொன்னார். (அ-எ)

## மகன் அனுராவுக்கு சிறிமாவோ எச்சரிக்கை!

கொழும்பு, ஆக. 20
தமக்கு எதிராகக் கட்சிக்குள் சதி முயற்சி இடம்பெறுவதாகத் தெரிவித்து, அது பற்றி விளக்குவதற்காக திரு. அனுரா பண்டாரநாயக்கா அழைக்கும் எந்தக் கூட்டத்திலும் கலந்து கொள்ளக் கூடாது.

இப்படி சுதந்திரக் கட்சி எம்.பிக்களை கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எச்சரித்திருக்கிறார்.

இதேவேளை —

திரு. அனுரா பண்டாரநாயக்காவுக்கு கடந்த 15 ஆம் திகதி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எழுதிய கடிதத்தில் கட்சிக்குள் சதி முயற்சி இடம்பெறுவதாக கட்சி உறுப்பினர்களுக்கு விளக்குவதை நிறுத்தும்படி கேட்டிருக்கிறார்.

''அப்படி நீங்கள் கட்சி உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து விளக்கமளிக்க முயற்சிப்பின் அது கட்சி ஒழுங்கு முறையை மீறும் செயலாகக் கருதப்படும்''— என்றும் திரு. அனுரா பண்டாரநாயக்காவை, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எச்சரித்திருக்கிறார்.

கட்சிக்குள் உயர் பதவிகளைப் பிடித்துள்ள சிலர் கட்சியிலிருந்து தம்மை நீக்கும் சதி முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

மிகத் தீவிர அரசு சார்பற்ற நிறுவனம் ஒன்றும் வாரப் பத்திரிகை ஒன்றும் இவர்களுக்கு உதவி வருகின்றன என்றும்—

ஆயுத வர்த்தகர் ஒருவரும் உதவி வருகிறார் என்றும் அனுரா பண்டாரநாயக்கா கடந்த வாரம் சுதந்திரக் கட்சி எம்.பிக்களுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்திருந்தார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் கடிதத்துக்கு தாம் உடனடியாகப் பதில் அனுப்பப் போவதாகவும் திரு. பண்டாரநாயக்கா கூறினார். [இ-எ]

## பருத்தித்துறைக்குப் பதிலாக காங்கேசனுக்குக் கப்பல்

### அரசின் திட்டம் இதுவாம்

கப்பல்களில் வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருள்களை இறக்கும் வேலைகள் பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்குப் படிப்படியாக மாற்றப்படும் என்று அரசு கூறியிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போது காங்கேசன்துறை துறைமுகத்தில் உள்ள 500 தொன் உணவுப்பொருள்களை பாரமேற்கும்படி யாழ். அரச அதிபர் மீண்டும் பணிக்கப்பட்டுள்ளார் என்றும் மேலும் அச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-எ)

## இனப்பிரச்சினை: தெரிவுக்குழு உறுப்பினர் விவரம் ஓரிரு நாட்களில்!

கொழும்பு, ஆக. 20
இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நியமனம் செய்யப்படவிருக்கும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இடம் பெறவிருப்பவர்களின் விவரம் இவ்வாரம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று செவ்வாய் முதல் 23 ஆம் திகதி வரை நாடாளுமன்றம் கூடவிருக்கிறது.

அப்போது தெரிவுக்குழுவின் உறுப்பினர் விவரங்களை சபாநாயகர் அறிவிப்பார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (த-எ)




பொன்னடி போற்றி! போற்றி!

கலியுகம் தன்னில் தோன்றிக்
கலாபநன் மயில்மீ தேறி
அலகிலா விளையாட் டாடி
அன்பர்தம் உளத்தில் நின்று
நலிவுகள் போக்க நல்லூர்
நகரிலே கோயில் கொண்ட
பொலிவுறு கந்தா உந்தன்
[illegible]

முருகனடியான்.


## தமிழர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஆக. 20
கடந்த 14 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டம் 13 ஆம் கிராமப் பகுதியில் படையினரும், ரெலோவினரும் இணைந்து அழகன் அற்புதம் என்பவரைக் கொடூரமாகச் சுட்டுக் கொலை செய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## உதயன்

### நீலிக் கண்ணீர்!

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சு வார்த்தைக்கு வருவதற்கு விடுதலைப்புலிகள் மறுத்து வருகிறார்கள் — என்று ஜனாதிபதி பிரேமதாசா கவலை தெரிவித்திருக்கிறார். பதுளையில் நடமாடும் செயலகத் தொடக்க நாளன்று அவர் இவ்வாறு வருத்தம் வெளியிட்டார்.

ஆனையிறவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் 24 நாட்களாகப் போட்டிருந்த முற்றுகையை முப்படையினரும் கஷ்டப்பட்டு உடைத்துத் தக்க வைத்துக் கொண்ட தகவல் எட்டியவுடனும் —

புலிகள் இனியாவது பேச்சுக்கு வருவார்கள் என்று தாம் நம்புவதாக திரு. பிரேமதாசா தெரிவித்திருந்தார்.

யுத்தத்தில் யாரும் வெல்வதில்லை என்ற பீடிகையுடன் அவர் அவ்வாறு கூறியது சற்றுக் கிண்டலாகக் கூடத் தொனித்தது. எவ்வாறாயினும் விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்துவர வேண்டும் என்பதில் தமக்கு அக்கறை இருப்பதாக அவர் வெகு சாதுரியமாகக் காட்டி வருகிறார்!

ஆனால் மூன்று மாதங்களுக்குப் பதவி நீடிப்புப் பெற்றுவிட்ட மகிழ்ச்சியில், இராணுவத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா முற்றிலும் அடுத்த பக்கமாகப் பேசுகிறார்!

ஆனையிறவுக்கு இப்பக்கமாக உள்ள முழுப் பகுதியையும் மூன்று மாதங்களுக்குள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து விடுவாராம். அதற்கேற்ற வகையில் வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வரவில்லை என்று ஜனாதிபதி ஒரு பக்கத்தில் ஓலமிடுகிறார்......

அதேவேளை, அவரது இராணுவத் தளபதி அடுத்த மூன்று மாதங்களிலும் யுத்தத்தைத் தீவிரப்படுத்தப் போவதாக வீம்பு பேசுகிறார்...!

இது... அரசனுக்கு மிஞ்சிய தளபதியா...? அல்லது தந்தையின் தோளுக்கு மேல் உயர்ந்த தனயனா? இரண்டில் எந்த நிலை...?

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு சாராரான விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு அருகே செல்வதானால், போர் நிறுத்தப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு செய்வதை கடந்த எட்டு மாதங்களாக அரசாங்கமே தட்டிக் கழித்து வருகிறது.

விடுதலைப் புலிகள் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்த அறிவிப்பைச் செய்து- அதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி - எட்டு மாதங்களாகின்றன. அரசு அதனைக் கைநழுவ விட்டதனால், இலங்கையின் அண்மைக்காலச் சரித்திரத்திலேயே, மிக நீண்ட 24 நாள் பெரும் போர் ஆனையிறவில் நடந்தது.

அதன் பின்னரும் யுத்த நிறுத்தம் ஒன்றைக்கொண்டு வந்து அரசியல் தீர்வுக்கான அத்திவாரம் இடும் சிந்தனை இன்னும் அரச தரப்பில் உதிக்கவில்லை.

மொத்தத்தில் அரசாங்கம் தவறிழைக்கிறது என்பதே உண்மை நிலை. அது குறித்து மக்களே கவலைப்பட வேண்டியவர்கள். ஆனால் ஜனாதிபதி விடுதலைப் புலிகளைக் குறை கூறி வெறும் நீலிக் கண்ணீர் வடிக்கிறார்!

ஜனாதிபதியின் கவலை அர்த்தமுள்ளதாக இருப்பின், அதனை நிரூபிக்கும் பொருட்டாவது அரசு யுத்த நிறுத்தத்தை அறிவித்து அரசியல் தீர்வுப் பாதையில் அடி பதிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் திராணி அதற்கு உண்டா?

## பொன்னாலையில் ஷெல் வீச்சு!

காரைநகர் கடற்படையினர் நேற்றுப் பகல் கோவளம், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி பீரங்கி — ஷெல் தாக்குதல்களை நடத்தினர். கலிபர் தாக்குதல்களும் இடம் பெற்றன.

பொன்னாலைப் பகுதியில் 6 ஷெல்கள் வரை விழுந்து வெடித்தன.

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவிலில் தற்போது வருடாந்த திருவிழா நடைபெற்று வருவதால் கடற்படையினரின் நடவடிக்கைகள் பக்தர்கள் மத்தியில் மனக் கிலேசத்தை ஏற்படுத்தி உள்ளது. [இ-28]

## சோவியத்தில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யாகத் தெரிவாகி இருந்தார்.

பதவி இழந்த கோர்ப்பச்சேவினால் அறிமுகப்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் அனைத்தும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக புதிய அரசு அறிவித்துள்ளது.

சோவியத் யூனியனில் ஆறு மாத கால அவசர கால நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக புதிய ஆட்சியாளர்களான கடும் போக்காளர்கள் அறிவித்துள்ளனர்.

உடல் நிலை காரணமாக தனது பொறுப்புகளைத் தொடர்ந்து நிறைவேற்ற முடியாத நிலை கோர்பச்சேவ்வுக்கு ஏற்பட்டிருப்பதாக 'டாஸ்' செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது.

பதவிநீக்கம் செய்யப்பட்ட கோர்பச்சேவ் 1952ஆம் ஆண்டில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் ஓர் உறுப்பினராகச் சேர்ந்தார்.

1985ஆம் ஆண்டில் சோவியத் கம்யூனிஸ்ட்கட்சித் தலைவராகவும் 1988இல் சோவியத் அதிபராகவும் பதவி ஏற்றார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதியாக அவர் தெரிவானார்.

அவரது ஆட்சிக் காலத்தில் 'பெரஸ்தரெய்கா' (அரசியல் சீர்திருத்தங்கள்) மூலம் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. வல்லரசுகளுக்கிடையிலான செடுபிடி யுத்தமும் தணிந்திருந்தது. (இ-எ)

## புலிகளின்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாஸன் அரசாங்கத்தைக் கோரியிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் —

தமது பாதுகாப்பில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளின் பட்டியலில் இருந்து இன்னொருவரை அந்த இயக்கம் இனித் தெரிவு செய்ய அரசாங்கம் அனுமதிக்கும் என்று சிரேஷ்ட இராணுவ வட்டாரம் தெரிவித்தது.

இதேவேளை —

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த சிப்பாய் கே. எல். உபாலி அங்கிருந்து விடுதலைப் புலிகளினால் வேறிடத்துக்கு அகற்றப்பட்டுள்ளார் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அரசுக்கு அறிவித்துள்ளது.

உபாலியை செஞ்சிலுவை அதிகாரிகள் அடிக்கடி சென்று பார்த்து வருகின்றனர் என்றும் —

உபாலிக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறியிருக்கும் என்று தாம் நம்புவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

காயமடைந்த உபாலியை விடுதலைப் புலிகள் தம்மில் ஒருவர் என்று தவறாக எண்ணி எடுத்துச் சென்றனர் என்றும் —

மருத்துவமனையில் உபாலி தம்மை ஸ்ரீலங்காச் சிப்பாய் என்று அடையாளம் காட்டினார் என்றும் அந்த இராணுவ வட்டாரங்கள் கூறியதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்நாடக மாநிலத்தில்

# மற்றொரு ஈழத்தமிழர் சயனைட் அருந்தி மரணம்!

பெங்களூர், ஆக. 20

கர்நாடகத் தலைநகர் பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் தங்கியிருந்த விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி என்று கருதப்படும் ஒருவர் நேற்று சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்றுக் காலை பொலிஸார் அம் மருத்துவமனைக்குள் அதிரடி நடவடிக்கையாக உள்ளே புகுந்தபோது, கைதாவதில் இருந்து தப்ப அவர் சயனைட் உட்கொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சயனைட் உட்கொண்ட இன்னொரு விடுதலைப் புலிகள் போராளியின் உயிர் ஊசலாடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வரை கர்நாடக மாநிலத்தில் 15 விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சயனைட் உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இதே சமயம் —

பெங்களூர் நகரை அடுத்த கோலான்குரி கிராமத்தில் நேற்று பொலீஸார் நடத்திய முற்றுகையின் மோது ஒரு தம்பதியர் உட்பட மூன்று விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் கைதாகினர் என்று தெரிவிக்கப்பட்டது.

# ஈழப்போராளிகள் - பொலீஸார் பெங்களூரில் நேற்று மோதல்?

பெங்களூர் ஆக. 20

பெங்களூருக்கு அருகே உள்ள கோலார் கொண்டா என்ற கிராமத்தில் நேற்று மாலை ஈழப் போராளிகள் தங்கி இருந்ததாகக் கருதப்படும் வீடு ஒன்றை கர்நாடகப் பொலீஸாரும் மத்திய புலனாய்வு பிரிவு அதிகாரிகளும் (சி. பி. ஐ.) சுற்றி வளைத்தபோது துப்பாக்கிச் சண்டை மூண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீட்டில் 8 பேர் தங்கி இருந்தனர் என்றும் பொலீஸாரைக்கண்டவுடன் லுங்கி, பனியன் அணிந்த இருவர் வெளியேற முயன்றபோது துப்பாக்கிச் சண்டை மூண்டது என்றும் கூறப்படுகிறது.

## வேலூரில் உண்ணாவிரதமிருந்த

# ஈழப் போராளிகள் மீது பொலீஸார் நடவடிக்கை!

சென்னை. ஆக. 20

வேலூர் பொலீஸ் பாடசாலை விடுதியில் உண்ணாவிரதம் இருந்த நான்கு ஈழப் போராளிகள் பொலீஸாரினால் பலவந்தமாக வைத்தியசாலை ஒன்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக அங்கு அனுமதிக்கப்பட்டனர்.

உண்ணாவிரதம் காரணமாக இவர்கள் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வேலூர் பொலீஸ் பாடசாலை விடுதியில் மொத்தம் 58 ஈழப்போராளிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் நால்வரே உண்ணாவிரதம் இருந்தனர்.

## கர்நாடக சம்பவம்

# சயனைட் இல்லாததாலேயே சிலர் உயிர் தப்பினராம்!

### இந்து பத்திரிகை தகவல்

கர்நாடக மாநிலத்தில் விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் சயனைட் உட்கொண்டு மரணமடைந்த சம்பவத்தில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட எஞ்சியவர்களிடம் போதியளவு சயனைட் வில்லைகள் இல்லாத காரணத்தினாலேயே அவர்கள் உயிர் தப்பினார்கள் என்று 'இந்து' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சயனைட் உட்கொண்ட ஒரு போராளிக்கு கைகளே இல்லை என்றும், இன்னொரு போராளிக்கு கால்களே இல்லை என்றும் 'இந்து' செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் 14 வயதுச் சிறுவனும் உள்ளதாக இன்னொரு செய்தி தெரிவிக்கிறது. [த-எ]

## விடுதலைப் புலிகளைப் பிடிக்க

# இந்தியப் பொலீஸாருக்கு 'புளொட்' உதவுகிறதாம்!

கொழும்பு, ஆக. 20

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை இந்தியப் பொலீஸார் கைது செய்வதற்கு அம் மாநிலத்திலுள்ள "புளொட்" தீவிரவாதிகள் உதவுகின்றனர் என்று புளொட் அமைப்பின் பிரமுகர் கரவை கந்தசாமி தெரிவித்தார்.

இத்தகவலை கொழும்புப் பத்திரிகை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

தமிழகத்தில் 'புளொட்' உறுப்பினர்கள் இன்னும் தங்கியிருந்து, விடுதலைப் புலிகளின் நடமாட்டங்கள் பற்றி இந்தியப் பொலீஸாருக்குத் தகவல் கொடுத்து வருகின்றனர் என்றும் அவர் சொன்னார்.

முகாம்களில் வைக்கப்பட்டுள்ள இருநூறுக்கும் அதிகமான "புளொட்" உறுப்பினர்களை விடுவிப்பது குறித்து இந்தியப் பொலீஸாருடன் பேச்சு நடத்த புளொட் அமைப்பின் சிரேஷ்ட தலைவர்கள் அடங்கிய குழு ஒன்று சென்னை சென்றிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 20 - 08 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## தடை செய்யப்பட்ட பொருள்களை அனுமதித்த

# ராணுவ அதிகாரிக்கு எதிரான சாட்சிகள் 'திடீர் மாயம்'!

### லஞ்ச விசாரணையை நடத்த முடியாத நிலை

கொழும்பு, ஆக. 20

தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியதாகக் கூறப்படும் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் மீதான விசாரணையை தொடர்ந்து நடத்த முடியாத நிலை லஞ்ச ஆணையாளருக்கு ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பான பிரதான சாட்சிகள் காணாமற் போய்விட்டனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விசாரணைக்கு உதவக் கூடியவர் எனக் கருதப்படும் இன்னொரு இராணுவ அதிகாரியைத் தாம் தேடி வருவதாக அதிகாரிகள் மேலும் கூறினார்கள்.

அநுராதபுரத்தில் பணி புரிந்து வந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவரே தடை செய்யப்பட்ட பொருள்களை வடபகுதிக்கு எடுத்துச் செல்ல அனுமதி வழங்கியதாகக் கூறப்படுகிறது. அவர் தற்போது காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்.

அவர் மீதான புகாரை விசாரிக்கும் பொறுப்பை இரகசியப் பொலீஸார் லஞ்ச ஆணையாளரிடம் ஒப்படைத்துள்ளனர். [உ-எ]

# நகை அணிவதை தவிர்க்குக!

யாழ்ப்பாணம், ஆக. 20

நல்லூர் திருவிழாவுக்கு வரும் பெண்கள் நகை அணிவதைக் கூடியளவு தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற தொண்டர் நிறுவனங்களின் கூட்டத்தில் வைத்து இவ்வேண்டுகோளை விடுக்க முடிவாகியது.

ஆலய உற்சவ முதல் நாளன்று மட்டும் மூன்று தங்கச் சங்கிலிகளும் ஒரு தாலிக் கொடியும் களவாடப்பட்டது கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

சைக்கிள்களையும் கண்ட கண்ட இடங்களில் வைக்காது, பாதுகாப்பு நிலையங்களிலேயே நிறுத்துமாறும் அடியார்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-30)

## புரட்சியை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

புதியஆட்சியாளர்கள் வலதுசாரிகள் என்று யெல்சின் குற்றஞ் சாட்டினார். புதிய ஆட்சியாளர்களின் சட்டதிட்டங்கள் ரஷ்ய மாநிலக் குடியரசில் செல்லுபடியாகாது என்றும் அவர் அறிவித்தார்.

நேற்று மாஸ்கோ வீதிகளில் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மனித சங்கிலிகளை உருவாக்கி சோவியத் டாங்கிகளைத் தடை செய்தனர். [இ]

## பழுதடைந்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கர்ணப்பட்டன என்று பாதுகாப்பு துணை அமைச்சுச் செயலாளர் வோல்டர் பெர்ணாண்டோ கூறியிருந்தார்.

அப்போது படையினரின் சடலங்கள் பற்றி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் அறிக்கை கோரியதாகவும், சர்வதேசக்குழு அதற்கு மறுத்துவிட்டதாகவும் திரு. பெர்ணாண்டோ கூறியிருந்தார்.

சர்வதேச நியதிகளுக்கு ஏற்பவே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நடந்து கொள்வதாகவும்—

தொடர்ந்தும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அது சேவையாற்றும் என்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேச குழுவின் கொழும்புப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (த-எ)

# பத்மநாபா கொலை; விசாரணையில் திருப்பமாம்

ஈ. பி. ஆர். எல். எவ் தலைவர் பத்மநாபா உட்பட, 19 பேர் கொலையுண்ட சம்பவம் தொடர்பான விசாரணையில் திருப்பம் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அக் கொலையைச் செய்தவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் அம்பாஸிடர் காரை பொலீஸார் திருச்சி கிருஷ்ணமூர்த்தி நகரில் உள்ள இலங்கைத் தமிழருக்குச் சொந்தமான பங்களா ஒன்றிலிருந்து கைப்பற்றியுள்ளனராம். (த-எ)

# ஈழத் தமிழ் சிறுவனுக்கு சென்னையில் கத்திக் குத்து

சென்னை நகரில் இலங்கைத் தமிழ்ச் சிறுவன் ஒருவனை நான்கு பேர் கொண்ட கோஷ்டி ஒன்று கத்தியால் குத்தி விட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓட்டோவில் அந்தோனி செல்லையா என்பவரின் வீட்டுக்குச் சென்ற அந்தக் கோஷ்டி, செல்லையாவிடம் 30 ஆயிரம் ரூபா பணம் தருமாறு கோரினராம். செல்லையா குடும்பத்தினர் அதற்கு மறுக்கவே அங்கு நின்ற இலங்கைச் சிறுவனை அந்தக் கோஷ்டி கத்தியால் குத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டது.

இது குறித்து பொலீஸார் வழக்கு ஒன்றைப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (த-எ)

## போலி இந்தியக் கடவுச் சீட்டில்

# ஈழத் தமிழரை வெளிநாடு அனுப்பிய மூவர் கைது!

திருவனந்தபுரம், ஆக. 20

போலி இந்திய பாஸ்போர்ட் மற்றும் வீஸாக்களைத் தயாரித்து, பின்னர் அவற்றைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு இலங்கைத் தமிழர்களை அனுப்பி வந்த மூன்று பேர் கொண்ட கோஷ்டி ஒன்றை கேரளப் பொலீஸார் கைது செய்துள்ளனர் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த வாரம் திருவனந்தபுரம் ஹோட்டலில் கைதான 2 பெண்கள் உட்பட, 22இலங்கைத் தமிழர் பற்றிய விசாரணைகளைத் தொடர்ந்தே இம்மோசடி அம்பலமானதாக பொலீஸார் தெரிவித்தனர்.

ஜீவன்குமார், அவரின் சென்னைப் பிரதிநிதி தண்டபாணி மற்றும் பொள்ளாச்சியைச் சேர்ந்த ஹரிதாஸ் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

இக்கோஷ்டி இதுவரை 50க்கு அதிகமான இலங்கைத் தமிழரை போலி இந்திய பாஸ்போர்ட் மற்றும் வீஸாக்களைப் பயன்படுத்தி வெளிநாடுகளுக்கு இந்தியாவில் இருந்து அனுப்பியதாக பொலீஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்திருக்கிறது. (த-எ)

# யாழ். பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 20

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் வெளிவாரிப் பட்டப்படிப்பு வசதி செய்யப்பட உள்ளது. எதிர்வரும் அக்டோபர் மாதம் ஆரம்பமாகும் கல்வி ஆண்டுடன் உயர்கல்வி மாணவருக்கு இந்தப் புதிய வாய்ப்புக் கிடைக்கும்.

கலை, வர்த்தகத்துறை ஆகிய இரண்டு பாடநெறிகள் இம்முறை ஆரம்பிக்கப்பட உள்ளன. கலைத்துறை மூன்றாண்டுகளும், சிறப்புக் கலைத்துறை நான்கு ஆண்டுகளும், வர்த்தகத்துறை நான்கு ஆண்டுகளும் கொண்டதாக இருக்கும்.

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களும், அங்கீகரிக்கப்பட்ட வேறு கல்வித் தகைமை உடையவர்களும் வெளிவாரிப் பட்டப்படிப்புப் பாடநெறிகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இதுகாலவரையும் தமிழ் மாணவர்கள் வெளிமாகாணங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் நடத்தும் வெளிவாரிப் பட்டப்படிப்புப் பாடநெறிகளையே கற்று வந்தனர். கலை, விஞ்ஞானத்துறைகளில் பேராதனைப் பல்கலைக்கழகமும், சட்டத்துறையில் கொழும்புப் பல்கலைக்கழகமும், வர்த்தகம், முகாமைத்துவத் துறைகளில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகமும் வெளிவாரிப் பட்டப்படிப்பு வசதிகளைச் செய்திருந்தன. அவற்றுக்கு அடுத்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மட்டுமே வெளிவாரிப் பட்டப்படிப்பு பாடநெறிகள் நடத்த பல்கலைக்கழக மானியக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

## உடன்படிக்கை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

த்து உச்சி மாநாடு நடத்தினார்.

அதன் பின்னர் நான்கு நாள் கழித்து ஆகஸ்ட் 4ஆம் திகதி கிரிமியா நகரில் விடுமுறையைக் கழிக்க திரு. கோர்பச்சேவ் சென்றார். தலைநகர் மாஸ்கோவுக்கு நேற்று அவர் திரும்பவிருந்தார். [இ-எ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org